முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2024 யூலை

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2024-08-11
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரலில்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணை*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**வரையறுக்கப்பட்ட WOT கம்பனி** வணிகமொன்றை முன்னெடுத்துச் செல்வதுடன் கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட WOT கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | 2023/24 | 2022/23 |
|---|---|---|
| இறுதித் தொக்கு (ரூபா) | 315,000 | 364,000 |
| விற்பனைக் கிரயம் (ரூபா) | 1,239,175 | 1,628,000 |
| வியாபார வருமதிகள் புரள்வு விகிதம் (தடவைகள்) | 2.50 | 2.62 |
| வியாபார சென்மதிகளின் தீர்ப்பனவுக் காலம் (நாட்களில்) | 110 | 150 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழிற்படு மூலதனச் சுற்றுக்காலத்தை (நாட்களில்) **கணிக்குக.**

(03 புள்ளிகள்)

(b) கம்பனியின் வியாபார சென்மதிகளின் தீர்ப்பனவுக் காலத்தை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்த வேண்டிய இரண்டு (02) தந்திரோபாயங்களை (strategies) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட ED கம்பனி, பொருள் X** இனை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. அது தனது முகாமைக் கணக்குகளைத் தயாரிக்கும்போது எல்லைக் கிரயமிடல் முறையைப் பயன்படுத்துகிறது. கீழ்வரும் தகவல்கள் 2024 மே மாதத்திற்கான கம்பனியின் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூபா (அலகொன்றுக்கு)** |
|---|---|
| நேர் பொருள் | 940 |
| நேர் கூலி<br>(0.75 மணித்தியாலம் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 800/-) | 600 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 130 |

கீழ்வரும் தகவல்களும் 2024 மே மாதத்துடன் தொடர்புடையவை ஆகும் :

| **நிலையான மேந்தலைகள்** | **பாதிடப்பட்டது (ரூபா)** | **உண்மையானது (ரூபா)** |
|---|---|---|
| உற்பத்தி | 7,920,000 | 8,150,000 |
| உற்பத்தியற்ற | 3,000,000 | 3,652,000 |
| | **10,920,000** | **11,802,000** |

| | **பாதிடப்பட்டது (அலகுகளில்)** | **உண்மையானது (அலகுகளில்)** |
|---|---|---|
| உற்பத்தி | 12,000 | 12,600 |
| விற்பனை | 12,000 | 11,800 |
| ஆரம்பத் தொக்கு | | 1,500 |
| இறுதித் தொக்கு | | 2,300 |

அலகொன்றின் உண்மையான / பாதிடப்பட்ட விற்பனை விலை ரூபா 3,200/-.

**நீங்கள் செய்யவேண்டியது :**

எல்லைக் கிரயமிடல் முறையைப் பயன்படுத்தி, 2024 மே 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக் கூற்றைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட Lots கம்பனி, பொருள் A2X** இனை தயாரிக்கிறது. அது அடுத்த நாட்காட்டி ஆண்டு 2025 இற்கான அதன் பாதீட்டைத் தயாரிக்கும் செயன்முறையை ஆரம்பித்துள்ளது.

2024 இன் முதல் 6 மாத காலப்பகுதியில் இடம்பெற்ற விற்பனை 218,500 அலகுகளாக இருந்ததுடன் 2024 இன் இறுதி 6 மாத காலப்பகுதியில் 245,000 அலகுகளை விற்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. விற்பனை அளவானது 2025 இல் 12% இனால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆரம்பத் தொக்கு 22,000 அலகுகளாக இருக்குமென எதிர்வுகூறப் பட்டுள்ளதுடன் கம்பனியானது 2025 ஆம் ஆண்டின் 2 மாத விற்பனைக்குச் சமானமான அளவில் இறுதித் தொக்கினைப் பேணுகிறது. 2025 ஆம் ஆண்டு காலப்பகுதி நெடுகிலும் சமமான எண்ணிக்கையிலான அலகுகள் விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2025 ஆம் ஆண்டிற்கான உற்பத்திப் பாதீட்டை அலகுகளில் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) பாதீட்டுச் செயன்முறையின் இரண்டு (02) நோக்கங்களை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட Able கம்பனி** அதன் சேவைநாடுநர்களுக்கு செயற்றிட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குகிறது. ஒரு புதிய சேவைநாடுநரான **பெரேரா,** ரூபா 3,500,000/- கட்டணத்தில் மாலைதீவிலுள்ள ஒரு வெளிநாட்டுச் செயற்றிட்டத்திற்கான செயற்றிட்ட முகாமைத்துவ சேவைகளைப் பெறுவதற்கு **வரையறுக்கப்பட்ட Able கம்பனியை** அணுகியுள்ளார். **வரையறுக்கப்பட்ட Able கம்பனி** இதற்கு முன்னர் மாலைதீவில் வேலைகள் எதையும் முன்னெடுத்திருக்கவில்லை என்பதுடன் கம்பனி அதன் பணியாளர் களுக்கான வேலை அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதுடன் இதற்காக ரூபா 450,000/- கிரயம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலுள்ளவற்றுக்குப் புறம்பாக, கீழ்வரும் தகவல்களும் இதற்குப் பொருத்தமுடையதாகும் :

(1) **செயற்றிட்ட முகாமைத்துவப் பணியாளர்கள் :**

செயற்றிட்டத்தின் அளவைப் பொறுத்த வரையில், 2 முகாமையாளர்களும் 5 முகாமையற்ற பணியாளர்களும் இந்தச் செயற்றிட்டத்திற்குத் தேவைப்படுகின்றனர். முகாமையாளர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 200,000/- நிலையான சம்பளம் வழங்கப்படுவதுடன், வெளிநாட்டுச் செயற்றிட்டமாக இருப்பின் வாரமொன்றிற்கு ரூபா 50,000/- மேலதிகமாக வழங்கப்படுகிறது.

முகாமையற்ற பணியாளர்களுக்கு மாதாந்தம் ரூபா 75,000/- செலுத்தப்படுவதுடன், வெளிநாட்டுச் செயற்றிட்டமாயின் வாரமொன்றிற்கு ரூபா 12,500/- உம் செலுத்தப்படுகிறது.

செயற்றிட்டமானது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அல்லது ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் அதனைப் பொருட்படுத்தாது நிலையான சம்பளம் செலுத்தப்படுகிறது.

ஒரு முகாமையாளரை மாத்திரமே இச்செயற்றிட்டத்திற்கு ஒதுக்கக்கூடிய நிலை காணப்படுவதுடன் மற்றைய முகாமையாளரின் வகிபாகத்தை ஆற்றுவதற்காக, வெளிநாட்டுச் செயற்றிட்டம் ஒன்றிற்கு வாரமொன்றிற்கு ரூபா 120,000/- கிரயத்தில் சுதந்திரமான (freelance) செயற்றிட்ட முகாமையாளர் ஒருவரை வாடகைக்கு அமர்த்தவேண்டியிருக்கும். இந்தத் தொகையில் தங்குமிடத்திற்கான கட்டணம் உள்ளடக்கப்படவில்லை.

(2) **தங்குமிட வசதி :**

வெளிநாட்டுச் செயற்றிட்டத்தில் பங்கேற்கும் அனைத்துப் பணியாளர்களுக்குமாக மாதாந்தம் ரூபா 400,000/- கிரயத்தில் தங்குமிட வசதி வழங்கப்பட வேண்டும். தங்குமிட வசதி மாதாந்த அடிப்படையில் கிடைக்கக்கூடியதாக இருப்பதுடன் அதற்கான கொடுப்பனவு ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் செலுத்தப்பட வேண்டும்.

(3) **தொடக்கநிலை கள விஜயம் :**

இந்தச் செயற்றிட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், ஆரம்பக் கட்டமாக **வரையறுக்கப்பட்ட Able கம்பனி,** செயற்றிட்டம் மற்றும் அதற்கு எடுக்கக்கூடிய கால அளவு பற்றிய புரிதலைக் பெற்றுக் கொள்வதற்காக, களத்தை மதிப்பீடு செய்யும் பொருட்டு முகாமையாளர் ஒருவரை மாலைதீவுக்கு அனுப்பியிருந்தது. இந்த விஜயத்தின் மூலம் கிடைத்த பின்னூட்டம் (feedback) சாதகமான நிலைமையைக் காட்டியதுடன் இதற்காக ரூபா 300,000/- செலவிடப்பட்டிருந்தது.

(4) **செயற்றிட்டக் காலம் :**

செயற்றிட்டம் 6 வாரங்கள் நீடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**வரையறுக்கப்பட்ட Able கம்பனி, பெரேராவின்** செயற்றிட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பதை **மதிப்பிடுக** *(உமது விடைக்கு ஆதரவாக கணிப்பீடுகளைத் தருக).* (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட தளபாடக் கம்பனியானது** தனிப்பயனாக்கப்பட்ட தளபாடங்களைத் (customised furniture) தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. அதன் செயற்பாடுகளுடன் தொடர்புடைய கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) வாடிக்கையாளர்கள் தளபாடங்களை வாங்குவதற்காக ஓடர் செய்யும்போது தளபாடப் பெறுமதியில் 50% இனை முற்பணமாகச் செலுத்துவதுடன் மீதித்தொகையானது தவணைக் கட்டணங்களாகச் செலுத்தப்படுகிறது. ஓடர் செய்யப்படும் தளபாடத்தைச் செய்து முடிக்க பொதுவாக 3 மாத காலம் எடுக்கிறது (அதாவது, ஓடர் ஒன்று 2024 யூலையில் செய்யப்படுமாயின் தளபாடமானது 2024 அக்டோபரில் செய்து முடிக்கப்படுகிறது). ஓடர்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளின் அடிப்படையில், கடந்த சில மாதங்கள் மற்றும் அடுத்த சில மாதங்கள் ஈறாக பெறப்பட்ட ஓடர்களின் முழுமையான பெறுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன:

| | மே-24 | யூன்-24 | யூலை-24 | ஆகஸ்ட்-24 | செப்ரெம்பர்-24 | அக்டோபர்-24 |
|---|---|---|---|---|---|---|
| **பெறப்பட்ட ஓடர்களின் மொத்தப் பெறுமதி (ரூபா)** | 14,000,000 | 8,000,000 | 5,500,000 | 3,200,000 | 10,000,000 | 7,500,000 |

(2) மூலப்பொருளின் கிரயம், ஓடர் செய்யப்படும் பெறுமதியில் 35% ஆக இருப்பதுடன், வாடிக்கை யாளரால் ஓடர் செய்யப்பட்டதன் பின்னர், மூலப்பொருள் உடனடியாகவே கொள்வனவு செய்யப்படு கிறது. மூலப்பொருள் கொள்வனவு செய்யப்படும்போதே அதற்கான மொத்தக் கொடுப்பனவும் செலுத்தப்படுகிறது.

(3) பணியாளர் கிரயம் மாதமொன்றுக்கு ரூபா 1,800,000/- ஆக உள்ளதுடன் அது ஒவ்வொரு மாத இறுதியிலும் செலுத்தப்பட வேண்டும்.

(4) ஏனைய மாறும் செலவினங்கள், ஓடர் பெறுமதியில் 10% ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ள துடன், அவை பொதுவாக விற்பனை ஓடர் உறுதிப்படுத்தப்பட்டதிலிருந்து 2 ஆவது மாதத்தில் தேவைப்படும். ஓடர்கள் பூர்த்தி செய்யப்படும்போது அவை தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

(5) நிலையான செலவினங்களாக மாதாந்தம் ரூபா 1,200,000/- இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாதமொன்றுக்கு ரூபா 450,000/- என்ற இயந்திரத் தேய்மானத் தொகையை உள்ளடக்க வில்லை. நிலையான செலவினங்கள் அந்தந்த மாதத்திலேயே தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

(6) கம்பனி, 2024 செப்ரெம்பரில் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடுவதுடன் அதற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 8,000,000/- ஆகும்.

(7) 2024 ஆகஸ்ட் 01 இல் ஆரம்ப காசு மீதி ரூபா 8,400,000/- ஆக இருந்தது.

(8) ஏதாவது மிகையாகவுள்ள காசு, வருடாந்தம் 9% வட்டியைச் சம்பாதிக்கின்ற சேமிப்புக் கணக்கொன்றில் வைத்திருக்கப்படும். வட்டியானது மாத ஆரம்பத்திலுள்ள ஆரம்ப மீதியின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2024 ஆகஸ்ட், செப்ரெம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

## வினா 06

***நியூ பீஎல்சீ*** என்பது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு கம்பனியாகும். ***நியூ பீஎல்சீ*** இன் நிதிக் கூற்றுக்களிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

(1) ***நியூ பீஎல்சீ*** இன் மூலதனக் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது :

| | **பங்குகளின் / தனிச்சங்களின் எண்ணிக்கை** | **பங்கொன்றின் / தனிச்சமொன்றின் விநியோகித்த விலை (ரூபா)** | **புத்தகப் பெறுமதி (ரூபா)** |
|---|---|---|---|
| சாதாரண பங்குகள் | 2,500,000 | 100 | 250,000,000 |
| பட்டியலிடப்பட்ட மீட்கப்படமுடியாத முன்னுரிமைப் பங்குகள் | 4,000,000 | 50 | 200,000,000 |
| 5 வருட 16% பட்டியலிடப்பட்ட மீட்கத்தக்க தனிச்சங்கள் | 2,100,000 | 100 | 210,000,000 |

(2) ***நியூ பிஎல்சீ*** ஆனது கடந்த ஆண்டிற்கான சாதாரண பங்குகளுக்கான பங்கிலாபமாக பங்கொன்றுக்கு ரூபா 20/- வீதம் செலுத்தியது. பங்கிலாபங்கள் ஆண்டிற்கு 12% வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப் படுகிறது. சாதாரண பங்கொன்றின் நடப்பு சந்தை விலை ரூபா 122/- ஆகும்.

(3) முன்னுரிமைப் பங்குகளின் நடப்பு சந்தை விலையானது பங்கொன்றிற்கு ரூபா 46/- ஆக இருப்பதுடன் பங்கொன்றின் வருடாந்த பங்கிலாபம் ரூபா 7/- ஆகும்.

(4) தனிச்சங்கள் தற்போது தனிச்சமொன்று ரூபா 103/- விலையில் வர்த்தகம் செய்யப்படுவதுடன், அவை 5 ஆண்டுகளில் மீட்கப்படும்.

*(வருமான வரி வீதம் 30% எனக் கொள்க.)*

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(a) சாதாரண பங்குகளின் கிரயம். (02 புள்ளிகள்)

(b) மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(c) மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயம். (03 புள்ளிகள்)

(d) நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் (WACC) – சந்தைப் பெறுமதியைப் பயன்படுத்தி.
(03 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(a) **வரையறுக்கப்பட்ட ரைட் கம்பனி** மூன்று வெவ்வேறு அளவுகளில் சிறப்புத் தலையணைகளைத் தயாரித்து, விற்பனை செய்கிறது. கீழ்வரும் விபரங்கள் பொருளின் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **ரூபா (அலகொன்றுக்கு)** | | |
|---|---|---|---|
| | **சிறிய தலையணை** | **சாதாரண தலையணை** | **பெரிய தலையணை** |
| விற்பனை விலை | 4,600 | 8,500 | 18,000 |
| **மூலப்பொருள் A** (கிலோகிராமொன்று ரூபா 1,100/-) | 2,200 | 4,400 | 8,800 |
| **மூலப்பொருள் B** (மீற்றரொன்று ரூபா 1,500/-) | 1,500 | 3,000 | 6,000 |
| நேர் கூலி (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 600/-) | 50 | 80 | 120 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 334 | 435 | 1300 |

2024 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் தலையணைகளுக்கான கேள்வி, **சிறிய தலையணைக்கு** 4,000 அலகுகளாகவும், **சாதாரண தலையணைக்கு** 6,000 அலகுகளாகவும், **பெரிய தலையணைக்கு** 1,500 அலகுகளாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில், **மூலப்பொருள் A** பற்றாக்குறையாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன், மொத்த அளவு 39,000 கிலோகிராம் மாத்திரமே இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

உத்தம உற்பத்திக் கலவையைத் (Optimal Production Mix) **தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ரைட் கம்பனி** வேறொரு வழங்குநரிடமிருந்து அதிக விலையில் பற்றாக்குறையாக இருக்கும் **மூலப்பொருள் A** இனைக் கொள்வனவு செய்வதற்கான சாத்தியக்கூறு காணப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நியாயப்படுத்தலுடன், **மூலப்பொருள் A** இன் கிலோகிராம் ஒன்றிற்கு செலுத்தப்பட வேண்டிய அதிகபட்ச விலையைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட பொக்ஸ் கம்பனி** பல அடுத்தடுத்த செயன்முறைகளைப் பயன்படுத்தி **பொருள் Fx** இனைத் தயாரித்து விற்பனை செய்கிறது. 2024 யூன் மாதத்தில் **செயன்முறை 3** இற்கான உள்ளீடுகள் கீழ்வருமாறு :

| | **ரூபா** |
|---|---|
| செயன்முறை 2 இலிருந்து மாற்றப்பட்ட உள்ளீடு (100,000 மீற்றர்கள்) | 42,200,000/- |
| நேர் கூலி | 15,400,000/- |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 12,700,000/- |

2024 யூன் மாத ஆரம்பத்தில், கீழ்வரும் பூர்த்தி மட்டங்களில், ஆரம்ப புத்துருவாகும் வேலைகளின் 14,600 மீற்றர்கள் இருப்பில் இருந்தன :

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் | : | 100 % பூர்த்தி, பெறுமதி ரூபா 5,783,800/- |
| நேர் கூலி | : | 50 % பூர்த்தி, பெறுமதி ரூபா 1,337,600/- |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | : | 30 % பூர்த்தி, பெறுமதி ரூபா 523,800/- |

2024 யூன் மாத இறுதியில், கீழ்வரும் பூர்த்தி மட்டங்களில் இறுதிப் புத்துருவாகும் வேலைகளின் 23,000 மீற்றர்கள் இருந்தன :

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் | : | 100 % |
| நேர் கூலி | : | 50 % |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | : | 25 % |

2024 யூன் மாத இறுதியில், 81,400 மீற்றர்கள் முடிவுப் பொருள்களாக மாற்றப்பட்டன.

சாதாரண நட்டமானது செயன்முறை 2 இலிருந்து உள்ளீடு செய்யப்படும் மீற்றர்களில் 8% ஆக இருப்பதுடன், அதனை மீற்றரொன்று ரூபா 95/- விலையில் விற்க முடியும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்று. (06 புள்ளிகள்)

(b) **செயன்முறை 3** கணக்கு. (09 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 09

**வரையறுக்கப்பட்ட ரோ கம்பனி** பெரியளவான கம்பல்களுக்குரிய மிகவும் சிறப்பு வாய்ந்த உதிரிப்பாகங்களைத் தயாரிக்கிறது. இத்தகைய உதிரிப்பாகங்களின் தயாரிப்புக்காகப் பயன்படுத்தப்படும் பிரதான இயந்திரத்தின் பயனுறுதிமிக்க ஆயுட்காலம் காலாவதியாகிவிட்டது. தற்போதுள்ள இயந்திரம், கணக்கீடு மற்றும் வரி நோக்கங்களுக்காக முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தற்போதுள்ள இயந்திரத்தைத் திருத்தியமைக்க கம்பனியின் முகாமை தீர்மானித்துள்ளது.

இயந்திரத்தைத் திருத்தியமைப்பதற்கு ரூபா 65,000,000/- செலவாகும் என எதிர்பார்க்கப்படுவதுடன் 5 ஆண்டுகளின் முடிவில் ரூபா 5,000,000/- என்ற மதிப்பிடப்பட்ட ஈற்றுப் பெறுமதியுடன் (residual value) இன்னுமொரு 5 ஆண்டுகளால் இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் நீடிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. வரி நோக்கங்களுக்காக, திருத்திமைத்தல் கிரயமானது ஆண்டிற்கு 25% இலான மூலதன விடுதொகைக்காக கவனத்திற் கொள்ளப்படலாம். அதே வேளை, கம்பனியானது கணக்கீட்டு நோக்கத்தின் தேய்மானத்திற்காக நேர்கோட்டு முறையைப் பயன்படுத்துகிறது.

இதற்கான தொழிற்படு மூலதன முதலீடு ரூபா 6,000,000/- என்பதுடன், இது செயற்றிட்டக் கால முடிவில் மீட்கப்பட வேண்டுமெனக் கருதப்படுகிறது.

இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி, மீன்பிடிப் படகுகளுக்கான உதிரிப்பாகங்களின் உற்பத்தி தொடங்கப்பட்டால், விற்பனைகள் கீழ்வருமாறு அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது:

| ஆண்டு | விற்பனை (அலகுகள்) |
|---|---|
| 1 | 4,000 |
| 2 | 6,000 |
| 3 | 8,000 |
| 4 | 5,000 |
| 5 | 4,000 |

முதலாவது ஆண்டில், விற்பனை விலையானது அலகொன்றுக்கு ரூபா 20,000/- ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முதலாவது ஆண்டில் மாறும் உற்பத்திக் கிரயம் அலகொன்றிற்கு ரூபா 10,000/- ஆக இருக்கும். அதன் பின்னர், மாறும் உற்பத்திக் கிரயமும் அதேபோன்று விற்பனை விலையும் ஆண்டிற்கு 8% என மதிப்பிடப்பட்ட பணவீக்க வீதத்தில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தேய்மானம் உள்ளடக்கப்படாத ஆண்டிற்கான நிலையான மேந்தலைகள் ரூபா 9,500,000/- ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, கம்பனியானது முதலாவது ஆண்டின் இறுதியில் சந்தைப்படுத்தல் செலவுகளாக ரூபா 8,000,000/- இனைச் செலவு செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, விற்பனைப் பெறுமதியில் 6% விற்பனைத் தரகு (sales commission) ஆனது 1 ஆவது ஆண்டு தொடக்கம் 5 ஆவது ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

கம்பனி ஆண்டிற்கு 30% இல் வருமான வரி செலுத்துவதுடன், அது, அந்தந்த ஆண்டிலேயே செலுத்தப்பட வேண்டும். கம்பனியின் மூலதனக் கிரயம் ஆண்டிற்கு 15% ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இயந்திரத் திருத்தியமைப்பின் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) **கணிக்குக.** (13 புள்ளிகள்)

(b) தற்போதுள்ள இயந்திரத்தைக் கம்பனி திருத்தியமைக்க வேண்டுமா என்பதை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 10

(A) **வரையறுக்கப்பட்ட பிக்ஷி கம்பனி** பாடசாலைகளில் பயன்படுத்துவதற்காக சிறுவர்களுக்குப் பாதுகாப்பான தீந்தையை (paint) உற்பத்தி செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| | **ரூபா (அலகொன்று)** |
|---|---:|
| நேர் பொருள் : | |
| **பொருள் A** (3 லீற்றர்கள் - லீற்றரொன்று ரூபா 400/- விலையில்) | 1,200 |
| **பொருள் B** (0.25 லீற்றர்கள் - லீற்றரொன்று ரூபா 2,000/- விலையில்) | 500 |
| நேர் கூலி (45 நிமிடங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 1,400/- வீதம்) | 1,050 |
| மாறும் மேந்தலைகள் (மணித்தியாலமொன்றுக்கு ரூபா 1,100/- வீதம்) | 825 |
| **மொத்த மாறும் கிரயம்** | **3,575** |
| விற்பனை விலை | 3,800 |
| **பங்களிப்பு** | **225** |

2024 யூன் மாதத்திற்காக, கம்பனி 40,000 அலகுகளை விற்பதற்கு மதிப்பிட்டிருந்ததுடன், மாதத்திற்காக மதிப்பிடப்பட்டுள்ள பாதிடப்பட்ட நிலையான கிரயம் ரூபா 6,425,000/- ஆகும்.

மாதத்திற்கான உண்மையான உற்பத்தி / விற்பனைக் கணியம் 37,600 அலகுகளாக இருந்ததுடன், 2024 யூன் 30 இல் முடிவடைந்த மாதத்திற்கான உண்மையான செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ளது :

| | **ரூபா** |
|---|---|
| விற்பனை வருமானம் (37,600 அலகுகள்) | 145,888,000 |
| நேர் பொருள் : | |
| **பொருள் A** (114,800 லீற்றர்கள்) | 41,902,000 |
| **பொருள் B** (8,648 லீற்றர்கள்) | 18,005,136 |
| நேர் கூலிக் கிரயம் (27,400 மணித்தியாலங்கள்) | 38,908,000 |
| மாறும் மேந்தலைகள் | 30,003,000 |
| நிலையான மேந்தலைகள் | 6,516,800 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2024 யூன் மாதத்திற்காக, கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) நேர் பொருள் விலை முரண். (02 புள்ளிகள்)

(b) நேர் பொருள் கலவை முரண். (03 புள்ளிகள்)

(c) நேர் பொருள் விளைவு முரண். (03 புள்ளிகள்)

(d) நேர் கூலி வீத முரண். (02 புள்ளிகள்)

(e) நேர் கூலி வினைத்திறன் முரண். (02 புள்ளிகள்)

(f) நிலையான மேந்தலை செலவின முரண். (02 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட சாட்ஸ் கம்பனி, A, B, C** என்னும் பெயர்களைக் கொண்ட மூன்று பொருள்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்கிறது. இந்த மூன்று பொருள்களும் அதன் நிரப்புத் தன்மை (complementary nature) காரணமாக நியமக் கலவையொன்றில் தயாரிக்கப்படுகின்றன.

கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட சாட்ஸ் கம்பனியின்** நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| **அலகொன்றின் நியமக் கிரயம்** | **பொருள் A (ரூபா)** | **பொருள் B (ரூபா)** | **பொருள் C (ரூபா)** |
|---|---|---|---|
| நேர் பொருள் | 65 | 84 | 100 |
| நேர் கூலி | 42 | 54 | 65 |
| மாறும் மேந்தலைகள் | 22 | 35 | 38 |
| உறிஞ்சப்பட்ட நிலையான மேந்தலைகள் | 15 | 22 | 30 |
| | | | |
| விற்பனை விலை | 180 | 240 | 260 |

வருடாந்த பாதிடப்பட்ட உற்பத்தி / விற்பனையானது **A** இன் 240,000 அலகுகளாகவும் **B** இன் 180,000 அலகுகளாகவும் **C** இன் 180,000 அலகுகளாகவும் உள்ளன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**பொருள்கள் A, B, C** ஆகியவற்றுக்கான இலாப – நட்டமற்ற புள்ளியை (Break Even Point) முறையே அலகுகளில் **கணிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |